7

# வாழ்வு என்பது நோக்கம் அற்றதாக இருக்கிறதா?

## (பிரசங்கி 1; 2)

*ஞான இலக்கியம் என்று அறியப்பட்டுள்ள எழுத்துக்களில் பிரசங்கியின் புத்தகத்தை நாம் காண்கின்றோம். ஞானத்தின் புத்தகங்களில் மூன்றை சாலொமோன் எழுதினார்: உன்னதப்பாட்டு, நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி. பிரசங்கி 1:1 சாலொமோனை "தாவீதின் குமாரனும் எருசலேமின் ராஜாவுமாகிய" என்று அடையாளப் படுத்துகிறது. "பிரசங்கி" என்ற பட்டம் "போதிப்பவர்" என்று அர்த்தப்படுகிறது.*

*சாலொமோனைத் தவிர வேறுயார் தமது முதிர் வயதில், வாழ்வு என்பது எதைப் பற்றியது என்பதை எழுதுவதற்கு மேன்மையான தகுதி பெற்றுள்ளார்? சாலொமோனுக்கு ஞானத்தின் விசேஷித்த வரம் அருளப்பட்டிருந்தது, அவர் வல்லமை, புகழ் மற்றும் செல்வங்கள் ஆகியவற்றுடன் ஒரு பூரணமான/முழுமையான வாழ்வை வாழ்ந்திருந்தார். அதில் ஒரு பகுதி தேவனுடனும் இன்னொரு பகுதி தேவன் இல்லாமலும் அவர் வாழ்ந்திருந்தார்.*

*வேதாகமத்தின் இந்தப் புத்தகமானது, எழுத்தாக்கத்தில் தனது வடிவமைப்பின் காரணமாக அடிக்கடி புறக்கணிக்கப்படுகிறது, இது இன்றைய நாட்களில் நமக்குப் பழக்கமற்ற புத்தகமாக உள்ளது. இதை வாசித்தல் என்பது சுலபமாக இருப்பதில்லை; சில வேளைகளில் இது, தொடர்பற்ற சிந்தனைகளாகக் காணப்படுபவை அங்கொன்றும் இங்கொன்றுமாக தொடர்ந்து வரும் வரிசையை அடக்கியுள்ளது. உண்மையில் வேத வாக்கியங்களின் வேறு எந்தப்பகுதியும் இதைவிட நமது காலத்திற்கு ஏற்புடையதல்ல. பிரசங்கியின் புத்தகமானது மனித நோக்கத்திற்கான தேடுதலின் மாபெரும் கேள்விக்குப் பதில் அளிக்க முயற்சி செய்கிறது: "நான் இங்கு என்ன செய்து கொண்டிருக்கின்றேன்?"*

*இந்தப் புத்தகத்தின் முடிவைப் பற்றி நீங்கள் அறியாதிருந்தால், இதன் தொடக்கமானது எதிர்மறையாக ஒலிப்பதாக நீங்கள் நினைக்கலாம். இதன் எழுத்தாளர், வாழ்க்கையில் பற்றின்றி சலிப்பு அடைந்ததாகக் காணப் படுகின்றார். வாழ்வு என்பது ஒரு (கடன்) பொறுப்பாக, வேலை என்பது மதிப்பற்ற ஒரு பணியாகவும், சந்தோஷம் என்பது கருத்தற்றதாகவும் சித்தரிக்கப்படுகிறது. இந்தப் புத்தகம் ''சூரியனுக்குக் கீழே'' உள்ள வாழ்க்கையை - இது அன்றாடம் வாழப்படுகின்ற வாழ்க்கை என்று*

அர்த்தப்படுகிறது - பற்றிப் படிக்கின்றது. இது இயற்கை மற்றும் வரலாறு ஆகியவற்றை, ஆண்டிற்குப்பின் ஆண்டாக, தலைமுறைக்குப் பின் தலைமுறையாக தெளிவான அர்த்தம் எதுவுமின்றி வருகிற மீண்டும் மீண்டுமான சுழற்சிகள் என்று சித்தரிக்கிறது.

இப்புத்தகத்தின்/கட்டுரை உரைகள் தொடருகையில், இதன் எழுத்தாளர் வாழ்வின் வீணான தன்மை பற்றிப் பொதுவாகக் கலந்துரையாடாமல், தேவனற்ற வாழ்வின் வீணான தன்மை பற்றியே கலந்துரையாடினார் என்பது தெளிவாகிறது. தேவனில்லாமல், வாழ்வின் லாபத்தின் மற்றும் நஷ்டத்தின் மொத்தமும் பூஜ்யத்திற்குச் சமமாகின்றன.

பிரசங்கியின் புத்தகம், வெறுப்பு மனப்பான்மை மற்றும் பரிதவிப்பு ஆகியவற்றின் புத்தகம் அல்ல. தேவன் தம்மை, மக்கள் தங்கள் வாழ்வி லிருந்து வெளியே வைத்துவிடும்படியான நோக்கத்தை ஒருக்காலும் கொண்டிருப்பதில்லை. தேவன் இல்லாத வாழ்வானது பிரயோஜன மற்றதும், இடுக்கண் நிறைந்ததும் மற்றும் நோக்கம் இல்லாததுமாயிருக் கிறது. நாம் தேவனுடன் (இருக்கையில்) மாத்திரமே உண்மையில் மகிழ்ச்சியாக இருக்கும் வகையில் அவர் நம்மைப் படைத்தார். தேவனே நமது வாழ்வில் சந்தோஷத்தையும் அதற்கு அர்த்தத்தையும் தருகின்றார். பிரசங்கியின் புத்தகம், நாம் வெறுமனே வாழ்வதினால் நிறைவைக் கண்டடையும்படியாக தேவன் திட்டமிடவில்லை ... ஆனால் தேவனுக்குள் வாழ்வதற்காகவே என்று நாம் முடிவு செய்யும்படி நம்மை வழிநடத்துகிறது.

## கேள்வி: நமது பூமிக்குரிய வாழ்வின் நோக்கம் என்ன? (1:3-11)

தலைமுறைகள் வருகின்றன மற்றும் போகின்றன, ஆனால் இந்த பூமியானது தொடர்ந்து உள்ளது (1:3-7). இயற்கையான இவ்வுலகம் சுழற்சிகளில் இயங்குகிறது என்று சாலொமோன் உற்றுக்கவனித்தார். ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாகி மறைகிறது. காற்றானது வடக்கில் இருந்து தெற்கு வரை ஒரு முழுமையான சுழற்சியை ஏற்படுத்தி, பருவ காலங்களின் மாற்றத்தின்போது மீண்டும் வருகிறது. நதிகள் மற்றும் நீரோடைகள் ஆகியவை தொடர்ந்து கடலை நோக்கிப் பாய்ந்தோடுகின் றன, இருப்பினும் கடல் ஒருக்காலும் நிரம்பி வழிவது இல்லை. இவை யாவையும் உலகக் கண்ணோட்டத்தில் ஒரு கணப்பொழுதிற்கானதாக மற்றும் நோக்கமற்றதாகக் காணப்படுகின்றன.

மனிதர்கள் வேலை செய்வதினால் தங்களைத் தாங்களே களைப்புக்கு ஆளாக்கிக் கொள்கின்றனர், ஆயினும் அவர்கள் ஒருக்காலும் திருப்தியடை வது இல்லை (1:8-11). சாலொமோன் தமக்கு அறைகூவல் விடுப்பதற்கென்று புதிதாக எதையும் காணமுடியாதிருந்தார். ஏற்கனவே நடைபெற்றிராத ஏதேனும் ஒன்று நடைபெறவில்லை. வரலாறு தன்னைத் தானே திரும்பவும் கொண்டுவருவதை அவர் கண்டார். வசனம் 9, “முன் இருந்ததே இனி மேலும் இருக்கும், முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும், சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை” என்று கூறுகிறது.

*"புதிய சாதனைகள் என்பவை எவ்வகையிலும் வேறுபாடு எதையும் உருவாக்குவதில்லை" என்று சாலொமோன் நினைத்ததாகக் காணப்பட்டது. அவர் பின்வருமாறு எழுதினார்:*

*முன் இருந்தவைகளைப்பற்றி ஞாபகம் இல்லை,*
*அப்படியே பின்வரும் காரியங்களைப்*
*பற்றியும் இனிமேலிருப்பவர்களுக்கு*
*ஞாபகம் இராது (1:11).*

*அவர், "நாம் செய்துள்ளவை பற்றி, நாம் இவ்வுலகத்தை விட்டுக் கடந்து சென்றபின்பு, எப்படியும் எவரொருவரும் நினைவுகூரப் போவதில்லையே" என்று அவர் புலம்பிக்கொண்டிருந்தார்.*

*இந்த இடத்தில் சாலொமோன், தேவனில்லாத ஒரு மனிதன் வாழ்வைக் கண்ணோக்குவதுபோல் வாழ்வைக் கண்ணோக்கினார். உலகத்தில் மிகவும் அதிகமாக வெளிப்படையாகப் பேசும் நாத்திகவாதிகள் சிலர் தங்கள் வாழ்வின் முடிவிற்கு வந்தபோது இதே போன்ற கண்ணோக்குகளை வெளிப்படுத்தியுள்ளனர். மனிதர்கள் - இயற்கையின் சமானத்தன்மையாக மாத்திரம் உள்ள - உயர்வகை விலங்குகளை விட மேலானவர்கள் அல்ல என்றிருந்தால், மனித வாழ்வானது விலங்குகளின் வாழ்வைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையதாக இராது. மதிப்பு மற்றும் கண்ணியம் என்பதற்கு அர்த்தம் எதுவும் இராது. உழைப்பும் சேவையும் வெறுமையாயிருக்கும். இந்தத் தத்துவக் கண்ணோக்கானது மனிதர்களை, "சுத்தமாக, பரிசுத்தமாக, சுயநலமின்றி அல்லது நேர்மையாக இருக்க வேண்டும் என்பதற்குக் காரணம் எதுவும் இல்லை! ஒரு விலங்கைப் போல வாழுங்கள்" என்றும், உங்களால் முடிந்தவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்! உங்களைப் பற்றி மாத்திரம் நினையுங்கள் என்றும், "வாழ்வு என்பது இங்கு மாத்திரமே உள்ளது! எதிர்காலம் என்று ஒன்றுமில்லை" என்றும் நினைக்கும்படிக்கு வழிநடத்தி இருக்கிறது. இப்படிப்பட்ட நம்பிக்கையற்ற எண்ணப்போக்குடன் இன்று வாழும் மனிதர்கள்தான் எத்தனை பேர்!*

## தேடுதல்: நமது பூமிக்குரிய வாழ்வு முழுவதும் எதைப் பற்றியது? (1:12-2:11)

*மனிதகுலமானது வாழ்க்கையில் பெருவருத்தத்தினால் பாடுபடுவது ஏன்? தேவனற்று இருக்கின்றவர்கள் கடின உழைப்பையும் சலிப்பையும் மாத்திரமே காணுகின்றனர் (1:13-18). சாலொமோன், "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன், இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" என்று கூறினார் (1:14). அநீதிகளை நிமிர்த்துவதையோ அல்லது தவறுகளை நேராக்கு வதற்கான வழி எதையுமோ அவர்கள் காண்பதில்லை. அவர்கள் தங்கள் இருதயங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்குத் தேவனுடைய வல்லமை எதையும் உணர்ந்து அறிவதில்லை. தேவனுடைய நியாயத்*

*தீர்ப்பானது எல்லாக் கணக்குகளையும் சமானப்படுத்தும் என்பதையும் அவர்கள் உணர்ந்து அறிவதில்லை.*

*சாலொமோன் தமது இருதயத்தை ஆராய்ந்து பார்த்தார், ஆனால் அவரால் பூமிக்குரிய ஞானத்தில் எவ்விதமான அனுகூலத்தையும் கண்டறிய இயலவில்லை. வாழ்ந்திருந்த எவரொருவரைக் காட்டிலும் அதிகமான ஞானமும் செல்வமும் தமக்குக் கொடுக்கப்பட்டிருந்ததை அவர் உணர்ந்தறிந்தார். அதுகூட அவருக்கு ஒரு சலிப்பான விஷயமாகவே இருந்தது: அவரது மாபெரும் ஞானத்தின் காரணமாக, பொறுப்பு மற்றும் துக்கம் ஆகியவற்றினால் அவர் பாரப்பட்டிருந்தார்.*

*சாலொமோன், வாழ்வின் அர்த்தத்திற்கான தமது தேடுதலில், எல்லாவற்றையும் முயற்சி செய்தார் (2:1-11). இன்பத்தில் அர்த்தம் கண்டறியப்பட வேண்டும் என்று அவர் நினைத்தார், ஆனால் அது பயனற்றது என்று நிரூபித்தது. சிரிப்பு என்பது கருத்தறிவு அற்றதாயிருந்தது; அதினால் திருப்திபடக்கூடியது எதுவும் சாதிக்கப்படவில்லை. பின்பு அவர், மதுபானத்தைக் கொண்டு முயற்சி செய்தார், இவற்றைச் செய்து கொண்டே, அவர் அதிக ஞானத்தை அடைய நாடிக்கொண்டிருந்தார். அடுத்ததாக அவர், களிப்பூட்டும் செயலானது பூமியில் மக்கள் நாடுகின்ற மகிழ்ச்சியைக் கொண்டுவரும் என்று நினைத்து, அதைக் கொண்டு முயற்சி செய்தார்.*

*கடைசியாக சாலொமோன், தமது பேரரசை விரிவுபடுத்துவதின் மூலம் மன நிறைவைக் கண்டறிய முயற்சி செய்தார். அவர் எல்லா வகையான கட்டிடங்களையும் கட்டுவித்தார். அவர் திராட்சத் தோட்டங்களையும் பழத்தோட்டங்களையும் நாட்டுவித்து அவற்றிற்கு நீர்பாய்ச்ச சகல முறைமைகளையும் செய்துவித்து முடித்தார். அவர் அடிமைகளை விலைக்கு வாங்கினார், அவரது வீட்டில் அதிக அடிமைகள் பிறந்தனர். அவர், எல்லா வகையான கால்நடைகளிலும் திரளான மந்தைகளைக் கொண்டிருந்தார். அவர் பணத்தைப் பெருகச் செய்வதிலும் செல்வங்களைச் சேர்த்துக் குவியச் செய்வதிலும் மனநிறைவை கண்டறிய முயற்சி செய்தார். அவர் கலாச்சாரக் கலைகளை அனுபவித்து, பாடகர் குழுக்களையும் இசைக்குழுக்களையும் மேம்படுத்தினார். அவரது பேரரசு பூமியில் மிகவும் பெரியதாயிற்று. அவர் தாம் விரும்பிய யாவற்றையும் பெற்றார், ஆயினும் இன்னமும் அவர் மனநிறைவற்றவராகவே இருந்தார்.*

*பூமிக்குரியவற்றை நாடுவதில் சாலொமோனுடைய அனுபவமானது இன்றைய நாட்களில் பல இலட்சக் கணக்கானோரின் சலிப்புகளைப் பிரதிபலிக்கிறது. இயேசுவின் போதனையில் உள்ள ஞானம் இரவில் ஒரு கலங்கரை விளக்கம் போல் ஒளிர்கிறது:*

> *பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத். 6:19, 20).*

## *பகுப்பாய்வு: பூமிக்குரிய வாழ்வு பற்றி சாலொமோன் கற்றது என்ன? (2:12-26)*

*இருளைப் பார்க்கிலும் ஒளி எவ்வளவு நல்லதோ, அவ்வளவுக்கு மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் நல்லது என்று சாலொமோன் முடிவு செய்தார் (2:12-16). ஞானமுள்ள மனிதன் பார்வையைக் கொண்டிருக்கையில், மதியீனமான மனிதன் இருளில் நடக்கின்றான், அவர்கள் ஒரு விஷயத்தைப் பொதுவானதாகக் கொண்டுள்ளனர் - அதாவது, அவ்விருவருமே மரிப்பார்கள். சாலொமோன், ஞானியாக இருப்பதில் சிறிதளவே பயன் இருப்பதாக முடிவு செய்தார். எதிர்கால சந்ததிகள், ஞானமுள்ளவர்களை மதியீனமானவர்களைவிட அதிகமாக நினைவில் வைத்திருப்பதில்லை என்று அவர் நம்பினார். அதாவது இருவருமே விரைவில் மறக்கப்பட்டு விடுவார்கள். வாழ்வு என்பது சாலொமோனுக்குக் கருத்தறிவு எதையும் ஏற்படுத்தாதபடியினால், அவர் கலவரம் அடைந்தார். வாழ்வு என்பது வெறும் பூமிக்குரிய பயணம் மட்டுமே என்று கண்ணோக்கப்படும் போது, அது ஒருக்காலும் கருத்தறிவை ஏற்படுத்துவதில்லை. மனிதனுக்குத் தேவனுடன் வாழ்வதற்கான நம்பிக்கை இல்லையென்றால், வாழ்வதற்கென்று நீடித்து நிலைத்திருப்பது எதுவுமே இல்லை என்றாகிறது. சிந்தையில் நித்தியத்திற்கான இலக்கு உள்ளபோது, பூமிக்குரிய வாழ்வு என்பது நித்தியத்திற்கான நிரூபணத்தையும் ஆயத்த களத்தையும் கொண்டு விளங்குகிறது. இது, ஒரு பெரிய போட்டியில் கலந்து கொள்வதற்கு பயிற்சிபெற்று, போட்டியிட்டு தன்னை அதற்கு நிலைப்படுத்திக் கொள்கின்ற ஒரு இளம் பந்தய வீரனுடன் ஒப்பிடப்படக் கூடியதாக உள்ளது.*

*சாலொமோன் தமது கண்டறிதல்களைப் பகுப்பாய்வு செய்துகொண்டிருக்கையில், மற்றவர்களுக்கு விட்டுச் செல்லும்படியாக ஒரு பெரிய செல்வத்தைச் சம்பாதிப்பதற்காகக் கடினமாக உழைத்தல் பயன் இல்லாதது என்று முடிவு செய்தார் (2:17-23). தமது பின்சந்ததியார் ஞானமாய் இருப்பாரா அல்லது மதியீனமாய் இருப்பாரா என்று எவராவது, அறிய முடியுமா? இந்தச் சந்ததியார், தங்களுக்குத் தாங்களே ஒரு நாளேனும் உழைத்தாலும் உழைக்காதிருந்தாலும், அவரது உழைப்பின் பயன் யாவற்றையும் தங்கள் வசத்தில் எடுத்துக் கொள்வார்கள். சாலொமோன், செல்வத்தை மாத்திரம் சேர்த்துக் குவிப்பதற்கு மாத்திரம் கடினமாக உழைத்தல் என்பது வாழ்வின் நோக்கம் அல்ல என்று முடிவு செய்தார். ஒரு மனிதன் தமது வாழ்நாள் முழுவதும் கடினமாக உழைத்து, அவனது உழைப்பின் பலனை அவனது மரணத்திற்கு பின்பு வேறொருவர் அனுபவித்தல் என்பது அவருக்கு நியாயமானதாகக் காணப்படவில்லை.*

*ஒருவகையில், சாலொமோன் சரியாகவே இருந்தார். நமது பிள்ளைகளை பொருளாதாரரீதியான பெருநிதிகளுக்கு வாரிசுகள் ஆக்குவதன்மூலம் நாம் அவர்களுக்கு பயனற்ற ஊழியம் ஒன்றைச் செய்கின்றோம். பல ஆண்டுகள் அனுபவத்திற்குப் பின்பும்கூட, பூமிக்குரிய செல்வத்தை வைத்து என்ன செய்வது என்பதை ஒருசில மக்களே அறிகின்றனர். இது, அவர்கள் ஈட்டாத செல்வமாய் இருந்தால் விசேஷித்த வகையில் உண்மையானதாக*

உள்ளது. மிகவும் கொஞ்சமாகக் கொண்டிருத்தலைக் காட்டிலும் மிகவும் அதிகமாகக் கொடுக்கப்படுவதால் பல பிள்ளைகள் கெட்டுப்போய் இருக்கின்றனர். வாழ்வில் பிள்ளைகள் தங்கள் சொந்தமாகப் பொருளீட்டு வதற்கான அறிவும் வாய்ப்பும் அவர்களுக்குத் தரப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களுக்குத் தேவனைப் பற்றிய அறிவு தரப்பட வேண்டும்.

ஒரு நபர், தாம் வாழ்கின்றபோது தமது உழைப்பின் பலன்களை மகிழ்வுடன் அனுபவிப்பதைக் காட்டிலும் வேறு ஒன்றும் மேன்மையான தல்ல என்பதே தொடக்கத்தில் சாலொமோனின் கூற்றாக இருந்தது (2:24-26). நாம் உழைத்துப் பெறுகின்ற ஒவ்வொன்றும் தேவனுடைய கரத்தில் இருந்து வருகிறது. தேவன் தாம் தகுதியென்று காண்கின்றபடி கொடுக்கின் றார் மற்றும் தமக்கு தகுதியென்று காண்கின்றபடி நம்மிடத்தில் இருந்து எடுக்கின்றார். நமக்கு என்ன தேவை என்பதையும் நாம் எவற்றை மேலாண்மை செய்ய முடியும் என்பதையும் தேவன் அறிகின்றார். அவர் ஒருவரிடமிருந்து எடுத்து இன்னொருவருக்குக் கொடுக்கலாம், ஏனென்றால் அந்த ஒருவரால் அவ்வரத்தின் பொறுப்பைக் கையாள முடியாமலும் இன்னொருவரால் அதைத் தக்கவிதத்தில் கையாள முடிந்தும் இருக்கும். ஒருவர் தமது வரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாலும் இன்னொருவர் அதை ஞானமாகப் பயன்படுத்துவதாலும்கூட தேவன் அதை ஒருவரிடத்தில் இருந்து எடுத்து இன்னொருவருக்குக் கொடுக்கலாம். மத்தேயு 25:14-30ல் உள்ள தாலந்துகளின் உவமையில் இயேசு இந்தப் பாடத்தைப் போதித்தார்.

தேவன் நமக்குக் கொடுப்பவற்றை நாம் அவருக்கு மகிமையைக் கொண்டுவரவும் அவரைக் கனப்படுத்தவும் பயன்படுத்த வேண்டும் என்று அவர் நம்மிடம் எதிர்பார்கின்றனர். நாம் அவரிடமிருந்து பிரிந்து வாழ் வதைத் தேர்ந்து கொண்டால், அவர் தம்மை நம்மிலிருந்து பிரித்துக் கொள்வார். அவரைக் கனப்படுத்துவதற்கு என்று நாம் நமது ஆசீர்வாதங் களைப் பயன்படுத்துவது எவ்வாறு என்று கற்றுக்கொள்ளாவிட்டால், அவர் நம்மீது பல ஆசீர்வாதங்களைப் பொழியாமல் இருக்கலாம்.

## முடிவுரை

வாழ்வின் அர்த்தம் பற்றிய சாலொமோனின் பகுத்தாய்வானது, வாழ்வைத் தக்கவகையிலான கண்ணோக்கத்தில் வைக்க நமக்கு உதவக்கூடும். நாம் என்ன வைத்திருக்கின்றோம் என்பதல்ல, ஆனால் நாம் வைத்துள்ளவற்றை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதே வாழ்வை அர்த்தம் நிறைந்ததாக்குகிறது. வெற்றிநிறைந்த வாழ்வு என்பது நமது சூழ்நிலைகளையல்ல, ஆனால் அந்த சூழ்நிலைகளைக்கொண்டு நாம் என்ன செய்கின்றோம் என்பதையே சார்ந்துள்ளது. வாழ்வின் இலக்குதான் அதன் அர்த்தத்தைத் தீர்மானிக்கிறது. சாலொமோனின் வார்த்தைகள், நமது வாழ்வைத் தேவனை நோக்கித் திருப்புவதற்கு நமக்கு உதவுகின்றன.

பிரசங்கியில் நாம் நமது படிப்பைத் தொடருகையில், இந்தப் புத்தகம் நமது வாழ்க்கையை நேராகத் திருப்பிப்போடுவதற்கு எவ்வாறு உதவுகிறது

*என்பதை நாம் காண்போம். நாம் பெரும்பாலும் தவறான விஷயங்களை வலியுறுத்துகின்றோம்; நாம் அழ வேண்டிய வேளையில் சிரிக்கின்றோம், சிரிக்க வேண்டிய வேளையில் அழுகின்றோம், பயப்படத் தேவையற்றவை களுக்குப் பயப்படுகின்றோம், பயப்பட வேண்டியவற்றுக்குப் பயப்படா திருக்கின்றோம். நாம் ஒரு தலைகீழான உலகத்தில் வாழ்கின்றோம். விஷயங்கள் இருக்க வேண்டிய நிலைபற்றிக் காண்பது நமக்குக் கடினமாய் இருக்கும் அளவுக்கு அவ்விஷயங்களை அவைகள் உள்ளவாறே விட்டு வைத்துக் காணும்படி நாம் மிகவும் பழக்கப்பட்டு விட்டோம். தலைகீழாக இருப்பது நேராக இருப்பது போலக் காணப்படுகிறது. நாம் ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரியதான கிறுகிறுப்பினால் துன்புறுகின்றோம். சாலொமோனை நம்புங்கள்! அவர் தேவனுடைய சித்தத்தைப் பேசினார்.*